*கவனிக்க .- 2015.07.10 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1924 - 2015 ජූලි මස 17 වැනි සිකුරාදා - 2015.07.17

*1924 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1012 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1013 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க .-** *ஊழியர் வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவுச் சட்டமூலம் 2015, மே மாதம் 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2015, ஒகத்து மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூலை மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## பதுளை மாநகர சபை

*ஊவா மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல்*

*பதுளை மாநகர சபையின் வெற்றிடங்களாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு, ஆட்களை சேர்த்துக்கொள்வதற்காக இந்த அறிவித்தலில் உள்ள தகைமைகள் பூர்த்தி செய்துள்ள பதுளை மாநகர அதிகாரப் பிரதேசத்துக்குள் நிரந்தர வதிவுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| *பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* | *சம்பள முறை* | *கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்* |
|---|---|---|---|
| பாதுகாவல் உத்தியோகத்தர் II | 03 | அ. தி. சு. 06/2006 (IV) PL 1-2006 A ரூ. 11,730 -10×120-10×130-10×145-12×160-ரூ.17,600 | **உள் விண்ணப்பதாரர்கள் :** குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு/9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல். **வெளி விண்ணப்பதாரர்கள் :** க. பொ. த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம், கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**சேவை நிபந்தனைகள்.-**

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

(2) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.

(3) தெரிவு செய்யப்படும் ஆண்/பெண் அலுவலர்கள் மூன்று வருடத் தகுதிகாண் காலத்துக்கு உட்படவேண்டும்.

(4) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக குடியரசின் தாபன விதிக்கோவைகளுக்கும் நிதிக் கோவைகளுக்கும் ஊவா மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது ஊவா மாகாண அரச சேவை அல்லது அரச திணைக்களம் அல்லது பதுளை மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் விதிகள் மற்றும் கட்டளைகளுக்கும் இணங்கி செயல்படக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

(5) நியமனம் கிடைத்தபின் மூன்று வருட காலத்தில் நிரந்தரமாக்கப்படுவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படும்.

**வயதெல்லை.**-18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். தற்போது சேவையிலுள்ள அரச, மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்கள் தொடர்பாக வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை.**-இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு 12" × 8" அளவுள்ள தாளில் விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்து 2015.07.30 ஆந் திகதிக்கு முன் “ மாநகர ஆணையாளர், மாநகர சபை, பதுளை” எனும் விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் சம்பந்தப்பட்ட பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும். உரிய திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் பூரணமற்ற விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுடைய விண்ணப்பங்கள் தமது நிறுவனத் தலைவரின் மூலமாக அனுப்புதல் வேண்டும்.

**சேர்த்துக் கொள்ளும் முறை.-**

(1) உரிய தகைமைகள் பூர்த்தியாகியுள்ள விண்ணப்பதாரிகளின் கட்டமைப்பிலான நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர் ;

(2) இந்த விண்ணப்பங்கள் கோரிய பின் அல்லது கோரும் காலத்துக்குள் சேர்த்துக்கொள்வதைத் தாமதப்படுத்துதல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இரத்துச் செய்தல் ஆகிய அதிகாரங்கள் பதுளை மாநகர சபை நகர ஆணையாளர் வசமுள்ளது.

டபிள்யூ. ரன்தெனிய,
மாநகர ஆணையாளர்,
பதுளை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
பதுளை,
2015, யூன் 17.

மாதிரி விண்ணபப்பபடிவம்

**பாதுகாவல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணபப்பபடிவம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.
 முதலெழுத்துக்களால் குறிப்பிடும் பெயர்கள் :----.
2. தபால் முகவரி :----.
3. பிறந்த திகதி :-
 ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
4. விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதிக்கு வயது:-
 வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :----.
6. தேசிய இனம் :-----.
7. தாங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரை மூலமா?/பதிவு மூலமா? என்பது :----.
8. கல்வித் தகைமைகள் :----.
9. தொழில் ரீதியான தகைமைகள் :----.
10. தாங்கள் தற்போது மாநகர சபையில் சேவை புரிபவராயின் :
 1. தற்போது வகிக்கும் பதவி :----.
 2. அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
 3. அந்த நியமனத்தின் தன்மை (நிரந்தர/சமயோசித/தற்காலிக/பதில் சேவை /ஒப்பந்த அடிப்படையிலா?) :----.

இந்த விண்ணபப்படிவத்தில் நான் கொடுத்துள்ள தகவல்கள் உண்மையானதும் மற்றும் பிழையற்றவையும் என்பதை நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை என இந்த பதவிக்குத் தெரிவு செய்வதற்கு முன் தெரியவந்தால், நான் தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனம் கிடைத்த பின் அவ்வாறானதொரு விடயம் தெரியவரின் எவ்வாறான இழப்பீடொன்றும் செலுத்தாமல் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

7-600

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**ரம்புக்கனைப் பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2015.03.24 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபை அங்கீகாரம் பெறப்பட்ட முன்மொழிதலுக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்ட கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எனக்கு

அனுப்ப வேண்டும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரசித்தப்படுத்தப்படும்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 -3 ஆம் பிரிவினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப அறவிக்கின்றேன்.

டபிள்யூ. ஏ. சி. விஜேசிங்ஹ,
செயலாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2015, யூன் 16.

**அட்டவணை**

வீதியின் விபரம்

| | | |
|---|---|---|
| நீளம் | : | 300 அடி |
| அகலம் | : | 8 அடி |

| | | |
|---|---|---|
| வீதியின் பெயர் | - | கல்லெனமுல்ல வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | ஹல்பிட்டிய |
| ஆரம்பம் | - | ஹல்பிட்டிய ஹபுகொட வீதியில் கலஹிட்டியாவ வயல் அருகால் |
| முடிவு | - | கலஹிட்டியாவத்த காணி |

ஹல்பிட்டிய ஹபுகொட வீதியில் கலஹிட்டியாவ வயல்வெளிக்கருகால் ஆரம்பித்து இடதுபக்கமாக ஏ. சுமனாவதீ மற்றும் ஆர். எம். அனுலாவதீ என்பவருக்கு உரித்தான கலஹிட்டியாவகும்புர, ஏ. சுமனாவதீ குமாரிஹாமி என்பவருக்கு உரித்தான கலஹிட்டியாவகும்புர, பீ. கே. மதுராவதீ மெணிகே என்பவருக்கு உரித்தான கலஹிட்டியாவத்த எனும் முகுணுகஹபில்லேவ, டி. ஆர். லஸந்த கோஸல பண்டார முணசிங்ஹ என்பவருக்கு உரித்தான முகுணுகஹமுல பில்லேவ எனும் கலஹிட்டியாவ எனும் காணிகளாலும்,

வலதுபக்கமாக ஓடையினாலும், பீ. கே. மதுராவதீ மெணிகே என்பவருக்கு உரித்தான கலஹிட்டியாவத்த எனும் முகுணுகஹபில்லேவ, டி. ஆர். லஸந்த கோஸல பண்டார முணசிங்ஹ என்பவருக்கு உரித்தான முகுணுகஹமுல்ல பில்லேவ எனும் கலஹிட்டியாவ எனும் காணிகளாலும் எல்லையானதுமான கல்லெனமுல்ல வீதி.

| | | |
|---|---|---|
| வீதியின் விபரம் | - | |
| நீளம் | - | 2110 அடி |
| அகலம் | - | 14-16 அடி |

| | | |
|---|---|---|
| வீதியின் பெயர் | - | போகஹதென்ன ஐந்தாம் ஒழுங்கை |
| கிராம அலுவலர் பிரிவு | - | தல்தேவ |
| ஆரம்பம் | - | தல்தேவ போகஹதென்ன |
| முடிவு | - | போகஹதென்ன |

தல்தேவ போகஹதென்னவிலிருந்து ஆரம்பித்து இடதுபக்கமாக டபிள்யூ. ஜீ. எம். பேமவதீ, டபிள்யூ. எம். குணசேன, டீ. ஜீ. அனோமா புஷ்பமாலி ரணசிங்ஹ, எல். பீ. கருணாதிஸ்ஸ, கே. ஜீ. தயாவதீ, பீ. கே. டி. சோமாவதீ மெணிகே, ஏ. ஏ. உபுல் பெரேரா, டீ. ஜீ. நயனா தீபானி ரணசிங்ஹ, ஆர். சரத் விஜயானந்த என்பவர்களுக்கு போகஹதென்ன காணி அல்லது காணிகளாலும்,

வலப்பக்கமாக கே. பீ. என். சமரதுங்க, வை. எம். ஜயரத்ன மெணிகே, டி. ஏ. மஞ்ஜுலா சஞ்ஜீவனி, ஜே. கே. பிரியன்த குணரத்தின என்பவர்களுக்கு உரித்தான போகஹதென்ன காணி அல்லது காணிகளால் எல்லையாகும் போகஹதென்ன ஐந்தாம் ஒழுங்கை வீதி.

வீதியின் விபரம்

| | | |
|---|---|---|
| நீளம் | - | 475 அடி |
| அகலம் | - | 8 அடி |

| | | |
|---|---|---|
| வீதியின் பெயர் | - | கிரிவானவிலிருந்து ஹல்கஹமுலஹேன வரையிலான வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | நாரம்பெத்த கிழக்கு |
| ஆரம்பம் | - | போகஹமுலவத்த |
| முடிவு | - | ஹல்கஹமுலஹேன |

நாரம்பெத்த பன்ஸல வீதியில் பாலத்திற்கருகில் போகஹமுலவத்த அருகால் ஆரம்பித்து இடதுபக்கமாக டீ. டபிள்யூ. ஜினதாஸ, டபிள்யூ. டி. ஜயசிங்ஹ, சோமசிறி குணதிலக, டபிள்யூ. டி. எஸ். விஜேசிங்ஹ என்பவர்களுக்கு உரித்தான அமுணே கும்புர, டபிள்யூ. டி. சுமனாவதீ என்பவருக்கு உரித்தான ஈரியகஹமுல கும்புர, டபிள்யூ. டி. எஸ். ஜயரத்தின என்பவருக்கு உரித்தான ஈரியகஹமுல கும்புர, ஆர். ஜயசேன என்பவருக்கு உரித்தான ஈரியகஹமுல கும்புர, டபிள்யூ. விமலசேன என்பவருக்கு உரித்தான தலகொல்லே போகஹமுலஹேன எனும் காணிகளாலும்,

வலதுபக்கமாக ஆர். ஜயசேன என்பவருக்கு உரித்தான தலகொல்லே போகஹமுலஹேன, டபிள்யூ. விமலசேன என்பவருக்கு உரித்தான தலகொல்லே போகஹமுலஹேன எனும் காணிகளாலும் எல்லையானதுமான ஹல்கஹமுலஹேன வரையிலான வீதி.

7-607/1

---

## ரம்புக்கனைப் பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2015.05.14 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபை அங்கீகாரம் பெறப்பட்ட முன்மொழிதலுக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்ட கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்ப வேண்டும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீள அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் பிரகடனப்படுத்தப்படும்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 -3 ஆம் பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப அறிவிக்கின்றேன்.

டபிள்யூ. ஏ. சி. விஜேசிங்ஹ,
செயலாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

ரம்புக்கனைப் பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2015, யூன் 16.

**அட்டவணை**

வீதியின் விபரம்

| | | |
|---|---|---|
| நீளம் | - | 180 அடி |
| அகலம் | - | 12 அடி |

| | | |
|---|---|---|
| வீதியின் பெயர் | - | பரணவத்த வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | பெலிகொடபிட்டிய |
| ஆரம்பம் | - | பெலிகொடபிட்டிய பிரதான வீதி |
| முடிவு | - | பரணவத்த |

பெலிபகொடபிட்டிய பிரதான வீதியிலிருந்து ஆரம்பித்து இடதுபக்கமாக டபிள்யூ. ஏ. டி. ராஜபக்ஷ என்பவருக்கு உரித்தான பரணவத்த, எல். எம். எஸ். லியனகே என்பவருக்கு உரித்தான பரணவத்த எனும் காணிகளாலும்,

வலதுபக்கமாக டபிள்யூ. ஏ. டி. ராஜபக்ஷ என்பவருக்கு உரித்தான பரணவத்த, எல். எம். எஸ். லியனகே என்பவருக்கு உரித்தான பரணவத்த எனும் காணிகளாலும் எல்லையாகும் பரணவத்த வரையிலான வீதி

7-607/2

## அரணாயக பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 14 ஆம் மற்றும் 24 (2) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தில் கேகாலை மாவட்டத்தில் அரணாயக பிரதேச சபையால் இங்கு இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாதைகள்/வீதிகள் அரணாயக பிரதேச சபைக்குரிய பாதைகள்/வீதிகள் எனப் பிரகடனப்படுத்தி இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தற்போது பிரதேச சபையினால் அளந்து அடையாளமிடப்பட்டுள்ள இப்பாதைகள் /வீதிகள் பற்றி குறித்த காணி உரிமையாளராக உரிமைபாராட்டுவோரால் ஏதாவது எதிர்ப்புக்கள் தெரிவிப்பதாயின் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தங்களது உரிமையை உறுதிப்படுத்துவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்சட்டத்தின் 24 (2) ஆம் பிரிவின் பிரகாரம் செயற்படுமாறு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இக்கால எல்லைக்குள் யாதேனுமொரு எதிர்ப்பு முன்வைக்கப்படாவிடின் அட்டவணையில் குறிப்பிடப்படும் பாதைகள்/வீதிகள் அரணாயக பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள்/வீதிகளாக ஏற்றுக்கொண்டு நிர்வகிக்கப்படும் எனவும், பொதுமக்கள் அறிந்துகொள்வதற்காக இத்துடன் பகிரங்க அறிவித்தல் விடுக்கின்றேன்.

டீ. எம். சந்திராவதி,
செயலாளர்,
அரணாயக பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
அரணாயக,
2015, யூன் 30.

### அட்டவணை

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | தல்கமுவை பிரதான வீதியில் கூட்டுறவு கடை அருகிலிருந்து குடா ஓய வரை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | தல்கமுவை அட்டாபிட்டிய பிரதான வீதியில் ஆரம்பித்து குடா ஓய வரை |
| கிராம அலுவலர் பிரிவு | : | தல்கமுவை - 33 B |
| பாதையின் நீளம் | : | 300 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணியின் உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. விகாராதிபதி யாகொட ரத்னசார தேரர் | தல்கமுவையூடாக பிட்டிகொட முங்கொட்டுவ காணி |
| 2. திரு. விகாராதிபதியாகொட ரத்னசார தேரர் | தல்கமுவையூடாக பிட்டிகொட முங்கொட்டுவ காணி |
| 3. திரு. டபிள்யூ. எம். ரணவீர | உடுமுல்லவத்த |
| 4. திரு. டபிள்யூ. எம். வீரசூரியா | உடுமுல்லவத்த |
| 5. திரு. ஏ. எம். மிலான் துஷார சந்திரதிஸ்ஸ | போகஹவத்த |
| 6. திரு. ஜீ. எம். டபிள்யூ. பெரேரா | வெலிமன்னவத்த |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணியின் உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. டபிள்யூ. எம். கே. வீரசூரிய | முங்கொட்டுவ காணி |
| 2. திரு. டபிள்யூ. எம். கே. வீரசூரிய | முங்கொட்டுவ காணி |
| 3. திரு. டபிள்யூ. எம். கே. வீரசூரிய | முங்கொட்டுவ காணி |
| 4. திரு. டபிள்யூ. எம். கே. வீரசூரிய | முங்கொட்டுவ காணி |
| 5. திரு. டபிள்யூ. எம். டி. ஜே. வீரசூரிய | அமுகஹவத்த |
| 6. திரு. கே. எம். பி. வர்ணகுலசூரிய | கஹட்டகஹவத்த |
| 7. திரு. டபிள்யூ. எம். ரணராஜா | உடுமுல்லவத்த |
| 8. திரு. கே. எம். கே. ரத்னசூரிய | உடுமுல்லவத்த |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கம்மன்னாகொடை ரத்மல்தெனிய பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | மஹகொடதென்னையிலிருந்து ரத்மல்தெனிய வரையான பாதை |
| கிராம அலுவலர்ப் பிரிவு | : | கம்மன்னாகொடை - 17 D |
| பாதையின் நீளம் | : | 300 மீற்றர் |
| பாதையின் அகலம் | : | 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஏ. ஆர். ஜயசேகர | பன்சலவத்தை காணி |
| 2. திரு. ஈ. ஆர். ஜினதாஸ | ரத்மல்தெனிய காணி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலதுபக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஏ. ஆர். ஜயசேகர | பன்சலவத்தை காணி |
| 2. திரு. ஈ. ஆர். ஜினதாஸ | ரத்மல்தெனிய காணி |

7-769

---

**தவலம பிரதேச சபை**

நிறைவேற்றுத் துணைவிதிகளை ஏற்றல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 221(அ) பிரிவினால் மொழியப்பட்ட 122மற்றும் 126ஆவது பிரிவுகளினால் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 1988 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க் கிழமை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 520/7 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிறைவேற்றுத் துணைவிதி) சட்டத்தின் கீழ் தயார் செய்யப்பட்ட இலக்கம் 1-42 வரையிலான நிரலிடப்பட்ட துணை விதிகள் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிறைவேற்றுத் துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3 ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளுக்குக் கீழ்பட்டதாக தவலம பிரதேச சபையினால் ஏற்கப்பட பொருத்தமான 21 ஆவது துணை விதிகள் மூலம் வரிசைப்படுத்தியுள்ள நேர்த்தியற்றதும், ஆபத்துகள் விளைவிக்கக்கூடியதுமான தொழிற்துறைகளுக்குரிய அட்டவணை இலக்கம் 1 இல் காட்டப்பட்டவாறு உள்வாங்கப்பட வேண்டுமெனவும் தவலம பிரதேச சபையினால் 2013.03.27 ஆந் திகதி பிரதேச சபை கூட்டத்தில் தீர்மான இலக்கம் 8 : 3 இன் கீழ், பிரேரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

பந்துல விஜேசேகர,
தலைவர்,
தவலம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
தவலம,
2015, மார்ச்சு 25.

***அட்டவணை - I***

**நேர்த்தியற்ற வியாபாரத் தொழிற்றுறைகள்**

1. யோகட் தயாரித்தல்
2. கோழிப்பண்ணை
3. ஐஸ்கிறீம் தயாரித்தல்
4. இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி
5. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
6. மரக்கறி, பழங்கள் விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
7. மலர்ச்சாலை ஒன்றை நடாத்துதல்
8. சுண்ணாம்பு, செங்கல் சூளையொன்றை நடாத்துதல்
9. அரைக்கும் ஆலையொன்றை நடாத்துதல்
10. மின் நெசவாலை ஒன்றை நடாத்துதல்
11. கரும்பு ஆலையொன்றை நடாத்துதல்
12. கயிறு திரிக்குமாலையொன்றை நடாத்துதல்
13. மிருக வளர்ப்புப் பண்ணை ஒன்றை நடாத்துதல்
14. தேயிலை, உப உணவு வகைகளை பொதி செய்து விற்பனை செய்தல்
15. நெல் குத்தும் ஆலை
16. முச்சக்கர வண்டி பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்

17. இயந்திரோபகரணங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்
18. மிதிவண்டி பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்
19. துவிச்சக்கர வண்டி பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்
20. பற்சிகிச்சை நிலையமொன்றை நடாத்துதல்
21. தேசிய மருந்து வகை உற்பத்தி நிலையமொன்றை நடாத்துதல்
22. உலோகங்கள் அரியும் பட்டறையொன்றை நடாத்துதல்
23. மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்
24. டயர், டியூப் பழுதுபார்க்கும் நிலையமொன்றை நடாத்துதல்
25. ஆடைத் தயாரிப்பு தொழிற்சாலையொன்றை நடாத்துதல்
26. பாலுணவு உற்பத்தி நிலையமொன்றை நடாத்துதல்

**ஆபத்து மிகு வியாபாரத் தொழிற்றுறைகள்**

1. கற்றுகுழியொன்றை நடாத்துதல்
2. இயந்திரோபகரணங்கள் மூலம் திண்மக்கல் தயாரிப்பு நிலையமொன்றை நடாத்துதல்
3. விவசாய இரசாயன பொருட்களை களஞ்சியப்படுத்தலும், விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
4. வேல்டின் வேலைத்தளமொன்றை நடாத்துதல்
5. அமிலங்கள் உற்பத்தியும், விற்பனையும்
6. எரிவாயு விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
7. பழைய உலோகங்கள் சேமிக்கும் நிலையமொன்றை நடாத்துதல்
8. இறப்பர் நாரிழை உற்பத்தியும், விற்பனை செய்யும் நிலையமொன்றை நடாத்துதல்
9. மின்சார வேலைத்தளமொன்றை நடாத்துதல்
10. விவசாய உபகரண பொருட்கள் உற்பத்தி நிலையமொன்றை நடாத்துதல்
11. எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை நடாத்துதல்

**நேர்த்தியற்றதும் ஆபத்துகள் மிகுந்ததுமான தொழிற்றுறைகள்**

1. கராஜ்
2. மரவாலை
3. பசளை விற்பனை நிலையமொன்றை நடாத்துதல்
4. இயந்திரோபகரணங்கள் மூலம் கருங்கல் அரைக்கும் ஆலையொன்றை நடாத்துதல்
5. குளிரூட்டி, குளிர்சாதனப் பெட்டிகள் பழுதுபார்த்தல்
6. அச்சாலையொன்றை நடாத்துதல்
7. தளபாடத் தயாரிப்பு கொட்டில் ஒன்றை நடாத்துதல்
8. கடலட்டை அரைக்கும் மாலையும், இரசாயன பதார்த்தங்கள் தயாரிக்கும் நிலையமொன்றை நடாத்துதல்
9. கம்மாலையொன்றை நடாத்துதல்
10. பற்றரி சார்ஜ் நிலையமொன்றை நடாத்துதல்

7-599

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.